தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஸு தை மீ 22 உ (4-2-'23.) | ப. 39.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 409
(உதவி பத்திராதிபர்)
2. புயற் காற்று ... 411
(V. நாராயணையர், M. A. M. L.)
3. எனது பாட்டியார் ... 413
4. ஸ்ரீ அகிலாண்டேசுவரீ தாடங்கப்பிரதிஷ்டை ... 414
5. தாலாட்டு ... 415
(K. N. சுந்தரேசன், M. A.)

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)
ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

உள் நாடு	வெளி நாடு
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' காரியாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

துருக்கிச் சமாதான நிபந்தனைகள் முழுமையும் வல்லரசுகளால் வரையப்பட்டு துருக்கியரிடம் அனுப்பப்பட்டுள்ளன. துருக்கியில் அன்னிய தேசத்தாருக்கு விசேஷ உரிமைகளைக் காப்பாற்றும் விஷயமும் அந்நிபந்தனைகளில் ஒன்றாகும். மோஸூல் பிரதேச நிர்வாக விஷயமாய் ஸர்வதேச ஸங்கம் விசாரணை செய்து வருகிறது. துருக்கியரும் பிரிடிஷாரும் ஸைந்நியங்களையும் கடற்படைகளை திரட்டி வருகிறார்கள். இதனிடையே சமாதானப் பேச்சுகளுக்கும் குறை யில்லை. சமாதானம் வேண்டு மாயின் யுத்தத்திற்கு தயாராயிருக்கவேண்டுமென்ற ஐரோபபிய ராஜதந்திரம் இங்கு உபயோகிக்கப்பட்டு வருகிறது.

* * *

ஜர்மனியில் ரூர் பிரதேசத்தை ப்ரஞ்சுக்காரர் கைவசப்படுத்திக் கொண்டு ஸைந்நிய பலத்தால் 'ஜர்மானியரை அடக்கி ஆண்டு வருகிறார்கள். பிரிடிஷாரோ ஒரு விதத்திலும் ஸம்பந்தப்படாமல் தனியே விலகிக் கொண்டிருக்கிறார்கள். ப்ரஞ்சுக்காரருக்கு உதவி புரிவதாக வாக்களித்த இடாலியரும் ஒருவாறு விலகியிருக்கிறார்கள். ஆயினும் ப்ரஞ்சுக்காரருக்கு தங்கள் ஸைந்நிய பலத்தில் நம்பிக்கை யாதும் குறையவில்லை. ஜர்மானியரோ ஒத்துழையாமையைக் கைகொண்டு ப்ரஞ்சுக்காரர்களுடைய எண்ணங்கள் பலிக்காவண்ணம் இடையூறுகளை இட்டு வருகிறார்கள். அனுபவத்தாலாவது ப்ரான்ஸ் தன் வழி உபயோகமற்றதெனத் தெரிந்து கொண்டு வருந்தும்.

* * *

கெனியாவில் வெள்ளையரின் ஆதினம் செழித்தோங்குகிறது. அங்கு குடியேறிய இந்தியர்களை தங்கள் அடிமைகளாக நடத்துவதே வெள்ளையரின் நோக்கம். அங்கு அரசுபுரியும் அரசாங்கம் இந்தியருக்குச் சிறிது இணங்கினாலும், அவ்வரசாங்கத்தையும் எதிர்த்து நிராகரித்தது இந்தியர்களைத் தாக்குவதற்கு வெள்ளையர்கள் முற்கிளம்பி யிருக்கிறார்கள். இந்நிலைமையில் பிரிடிஷ் அரசாங்கங்களுக்குள் பரஸ்பர ஸ்நேகத்தையும் ஒற்றுமையையும் ஆதரிக்கும் பலருடைய கருத்து எவ்வாறு நிறைவேறும். இந்தியருடைய நிலைமையை சீர்திருத்தச் சக்தியற்ற இந்தியா கவர்ன்மென்டாரை யார் மதிக்கலாம். இந்தியருடைய சுயமதிப்பைக் காப்பாற்றக் கூடிய அரசாங்கத்தையே ஸ்தாபிக்க ஒத்துழையாதார் முயற்சிக்கிறார்கள்.

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில் ஸ்ரீ. வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

இந்தியாவில் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களுடைய நிலைமையைப் பற்றி விசாரிக்கும்படி ஓர் கமிஷன் நியமனம் பெற்றிருக்கிறார்கள். இவ்விசாரணையை இந்தியர் எவரும் கோரியவரில்லை. ஆயினும் இந்தியா அரசாங்கச் செலவிலேயே இவ்விசாரணை நடந்தேற வேண்டுமாம். இதற்கு முன் பல கமிஷன்கள் பற்பல விஷயங்களை ஆராய்ந்தமட்டில் நாம் செலவைத் தவிர பலனை யாதும் பெறவில்லை. இச்சமயத்தில் அரசாங்கச் செலவைக்குறைக்கும் விஷயமான எண்ணங்கள் மேலிட்டிருக்க, செலவுக்கு வழிதேடும் வகைகளும் ஓரிடத்தில் நடந்து வருகிறது.

பரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழிநிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வுற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர்நிலைமை யெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத்தொழிலை விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச்சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டுமென்பதே இந்நூலில் நோக்கமாகும்.

விலை ரூபா 1—0—0.

கணேஷ் கம்பெனி,

39, தம்பு செட்டி தெரு, சென்னை.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமி முதலியார் எழுதியது

		ரூ.	அ.
இந்திரா பாய்	..	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன் சுந்தர சிங்	...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை அம்புஜாக்ஷி	...	2	0

வி. நாராயணன் கம்பெனி,

4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

ஓஹோ! ஓஹோ!!

ஒவ்வொரு பக்கமும்

சரீர சுகத்தைப்பற்றி

போதிக்கிற தேன்பதை

நமது

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம். தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடைக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

தபால் பெட்டி நெ. 1252,

26, பிராட்வே, மதராஸ்.

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

நீண்ட காலமாய் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கோயம்புத்தூர் வக்கீல்

V. குப்புசாமி அய்யரவர்களுடைய

ஸ்ரீமத் பகவத் கீதை

யின் மொழி தமிழ் பெயர்ப்பு ஐந்தாவது பதிப்பாக இப்போது வெளிவந்து விட்டது. இதில் மூலஸ்லோகம் கிரந்தத்திலும், தமிழ் ஸ்லோகம், பதவுரை, பொழிப்புரை மதத்திரய பாஷியங்களின் அபிப்பிராய பேதங்கள், ஸ்வய அபிப்பிராயம் முதலியவை அடங்கியுள்ளன. முதல் 10 அத்தியாயங்கள் கொண்ட முதல் வால்யம் ராயல் 1-8 சைசில் 566 பக்கங்கள் கொண்டது., காலிகோ பைண்ட் செய்யப்பட்டது. விலை ரூபா 5—0—0.

வி. பி. தபாற் செலவு 0—11—0.

இரண்டாவது வால்யம் அச்சிலிருக்கிறது.

A. சபாபதி பிள்ளை, ருக்மா மான்ஷன்,

திருவல்லிக்கேணி, சென்னை.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A. M. L.]

(பிராம்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்ததும் ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும் ; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடுசென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்லியாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்றதும்; கப்பல் சிறிது தூரம் போனபிறகு ஆற்றில் மணலில் சிக்கிக்கொண்டதும் சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை)

கமலா சுற்றிப் பார்த்தாள். இரண்டாம் வகுப்புக்காரர்களின் இடத்திற்கு அப்பால் தான் முந்திய நாள் மறைப்புக் கட்டி சமையலுக்கு ஏற்படுத்தியிருந்த இடத்தருகில் உமேசன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

கப்பலில் இரண்டாம் வகுப்பில் வேறு பிரயாணிகள் இல்லை. மேற்துணியை எடுத்துப் போர்த்திக்கொண்டு உமேசன் கிட்ட நெருங்கிச் சென்று " அந்த சாமான்களை யெல்லாம் வீசி எறிந்து விட்டாயா ?" என்று கேட்டாள்.

"இல்லை, அம்மா, எல்லாவற்றையும் இதோ இங்கே வைத்திருக்கிறேன்."

"இந்தமாதிரிக் காரியம் செய்யக்கூடாது, தெரியுமா ?" என்றாள் கமலா கண்டிப்பவள் போல் "இனிமேல் இப்படிச் செய்யவே கூடாது; என்னமாயிருக்கும் கப்பல் புறப்பட்டுப் போயிருந்தால், நினைத்துப்பார்."

பிறகு சமையல் பண்ணுமிடத்திற்குச் சென்று "அருமாமணையைக் கொண்டுவா" என்று உத்திரவிட்டாள்.

உமேசன் கொண்டுவரவே, கமலா காய்கறிகளைச் சீவி நறுக்கித் தயார்செய்தாள்.

"அந்தக் கீரையோடு கடுகை அரைத்துக் கலக்கினால் நன்றாய் இருக்கும்" என்றான் உமேசன். "சரி, கொஞ்சம் அரைத்துக் கொண்டுவா" என்றாள் கமலா.

உமேசனின் துஷ்கிருத்தியத்திற்கு அநுகுணமாயிருப்பது போல் தோன்றக்கூடாது என்று ஜாக்கிரதையாய் அவன்மீது வருத்தப்பட்டு முகத்தைச் சுளிக்கிக்கொண்டே பூசனிக்காய் கத்தரிக்காய் முதலியவற்றை துண்டம் செய்துகொண்டு இருந்தாள்.

ஆனாலும், பாவம்; திக்கற்ற சிறுவனான அந்தப் பையனிடம் அவளால் அநாதரவுடன், எப்படியிருக்க முடியும்? அப்படி யென்ன பெரும் மோசமா காய்கறியைத் திருடிவந்தது, அநாதியான இந்தச் சிறு பையனை அப்படியே திக்கரித்து விட்டுவிட மேலும் அவன் திருடி வந்தது கூட இவள் மனதை ஒருவிதம் கவர்ந்தது அவளைக் களிப்பிக்க வன்றோ. அவள் திருப்தியடைவாள் என்று நினைத்தன்றோ இவ்விதம் தோட்டங்களிற் போய் காய்கறிகளைக் கொண்டு வரவேண்டுமென்று யோசனை செய்தான் உமேசன்; அதனால் கப்பலைக்கூடத் தப்பிவிடுவான் போலிருந்ததே!

"நேற்றுத் தயிரில் கொஞ்சம் மிகுந்திருக்கிறது. அதை உனக்குத் தருகிறேன், உமேசா ஆனால் இந்த மாதிரி இனிமேல் செய்வதே கூடாது, தெரியுமா."

"நேற்றுத் தயிரை நீங்கள் சாப்பிடவில்லையா, அம்மா" என்று தான் செய்த காரியத்திற்காக வருந்தினவன்போல் தழதழத்த குரலில் உமேசன் கேட்கவே "உனக்குப்போல் எனக்கு தயிர் அவ்வளவு பிரியமில்லை; அதிருக்கட்டும்; மீன் தவிர எல்லாம் இருக்கிறது சாப்பாட்டிற்கு; கொஞ்சம் மீனும் இருந்தால் நன்றாயிருக்கும் யஜமானர் சாப்பிடுவதற்கு."

"மீன் கொண்டுவருகிறேன், அம்மா; ஆனால் இதற்கு விலை கொடுக்கவேண்டும்."

கமலா உமேசன்மேல் கோபித்துக் கொண்டு "என்ன பைத்தியம் நீ!" என்று தன்னுடைய அழகிய புருவங்களை நெருக்கி, "யார் சொன்னார்கள் சாமான்களுக்கு விலைகொடுக்காமல் வாங்கி வரவேண்டுமென்று."

முந்தினநாள் நடந்த விருத்தாந்தங்களினின்றும் உமேசன் கமலா இராமேசனிடமிருந்து பணம் வாங்குவதற்குக் கஷ்டப்படுகிறாள் என்று நினைத்து அதற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் இராமேசனிடம் வெறுப்புக் கொண்டிருந்தான். அவனுடைய யோசனையிலெல்லாம் தானும் கமலாவும் மட்டுமே தோன்றினாரே யொழிய இராமேசனைப் பற்றி அவன் நினைக்கவே இல்லை.

காய்கறி என்றால் சுலபமான காரியம்; மீன் அப்படி யல்ல; நாம் வணங்கும் தேவதைக்குக் கொஞ்சம் மீனும் தயிரும் கொடுப்பதற்குக்கூட பணம் வேண்டியிருக்கிற இவ்வுலகு, கமலாவை வழிபட்டு நிற்கும் அவனுக்கு சௌகரிய மற்ற பிரதேசமாகவே தோன்றிற்று.

"யஜமானரிடமிருந்து ஒரு ஐந்து அணா வாங்கிக் கொடுக்க முடியுமானால் நல்ல பெரிய மீனைக் கொண்டுவருகிறேன்."

"மறுபடி உன்னை கப்பலைவிட்டுப் போகவிடமாட்டான்; உனக்காக இன்னொருதடவை கப்பலை நிறுத்தமாட்டார்கள்."

"கரைக்குப் போகவேண்டாம், அம்மா; கப்பல் வேலைக்காரர் இன்று காலையிலே பெரிய மீன் பிடித்தார்கள். அதில் ஒன்றையோ ஒரு பாகத்தையோ நமக்கு விலைக்குக் கொடுப்பார்கள்.

கமலா உடனே ஒரு ரூபாயைக் கொண்டுவந்து உமேசனிடம் கொடுத்தாள்.

"விலையைக் கொடுத்துவிட்டு பாக்கியை வாங்கிக் கொண்டுவா."

சற்றுக் கெல்லாம் உமேசன் மீனுடன் வந்தான். ஆனால் சில்லறை கொண்டுவரவில்லை. "ஒரு ரூபாய்க்குக் குறைய வாங்கிக்கொள்ள மாட்டேன்

என்றார்கள்'' என்று சொன்னான். அவன் பேசியது முழு மெய் அல்ல என்று அறிந்த கமலா புன்சிரிப்புடன்,

''அடுத்த தடவை கப்பல் நிற்கும்போது கொஞ்ச ரூபாய்க்குச் சில்லரை மாற்றிவைத்துக்கொள்ள வேண்டும்'' என்றாள்.

''ஆமாம், அம்மா'' என்று உமேசனும் ''முழு ரூபாயைக் கண்டு விட்டார்களானால் அவர்களிடமிருந்து பாக்கி சில்லரை வாங்க முடிவதில்லை''

சற்று நேரமானதும் சாப்பிடவந்த இராமேசன் ''இதென்ன நேர்த்தி! நன்றாயிருக்கிறதே; எங்கிருந்து கிடைத்தது இது; மீனின் தலைபோலிருக்கிறதே'' என்று அதைத் தூக்கிக்கொண்டே ''இது ஸ்வப்னமல்ல, கண் சிதறலுமல்ல, வெளித் தோற்றமுமல்ல, நினைப்பினால் எழும் பொய்யுருவுமல்ல; செம்மீனுடைய தலை என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்.''

அன்று சாப்பாடு அவ்வளவு திருப்திகரமாய் நடந்தேறிற்று. இராமேசன் சாப்பிட்டு விட்டு வெளியில் போடப்பட்டிருந்த நாற்காலியிற் போய் சாய்ந்ததும் உமேசன் சாப்பிட உட்கார்ந்தான். அவன் மீன்கறியைப் போடப் போட உத்சாகமாய் சாப்பிடக்கண்ட கமலாவுக்கு அவன் உடம்புக்கு ஆகுமோ என்ற பயம் உண்டாயிற்று. ''இவ்வளவு போதும், உமேசா, பாக்கியை இராத்திரிக்கு என்று வைத்திருக்கிறேன். அப்போது சாப்பிடலாம்'' என்றாள்.

இவ்விதமான வேலைகளாலும் விளையாட்டுச் சுபாவத்தாலும் காலையில் கமலாவுக்கு இந்த மனத் துயரம் மெதுவாய் அவளறியாமலே மாறிவிட்டது; பொழுது போயிற்று, சூரியன் மேல்வானத்தில் அஸ்தமானத்திற்கு விரைந்து செல்வானாயினான். கப்பலில், காற்று வெயிலின் வெப்பத்தோடு வீசிற்று; பயிர்வளர்ந்து பசுமையால் காணப்பட்ட கழனிகளினூடேயுள்ள தடங்களின் வழியே அருகாமையிலுள்ள கிராமத்துப் பெண்கள் குடங்களை இடுப்புகளில் தாங்கி ஆற்றங்கரையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். சாயங்காலப் பொழுதெல்லாம் கமலாவும் வெத்திலை சுருட்டித் தயாரித்தல், தலையை வாரிப் புனைதல் வேறு சீலையைக் கட்டிக்கொண்டு, துணிகளை கசக்கிக் காயப் போடுதல் முதலிய காரியங்களால் ஒழிவு இல்லாமலிருந்தது. இவை முடியுமுன் கிராமத்தைச் சூழ்ந்திருந்த மூங்கிற் புதர்களுக்குப் பின்புறத்தில் சூரியனும் அஸ்தமித்துவிட்டான்.

முந்தின நாளைப்போலவே அன்றும் கப்பல் வழக்கமாய் நிற்கும் துறைகளில் ஒன்றில் ஒதுங்கி நின்றது; காலையிற் சமைத்த காய்கறி முதலியவை போதும் அதிகம் சமைக்கவேண்டாம் என்று கமலா நினைத்துக் கொண்டிருக்கும்போது இராமேசன் உள்ளே வந்து தான் பகலில் நன்றாய் சாப்பிட்டதால் பசிக்கவில்லை இராத்திரி ஆகாரம் ஒன்றும் வேண்டாம் என்று சொன்னான்.

''ஒன்றும் வேண்டாமா, கொஞ்சம் மீன் வறுவலாவது சாப்பிடக்கூடாதா? '' என்றாள் கமலா சற்று வருத்தமடைந்து.

''வேண்டாம்'' என்று இராமேசன் சொல்லிக் கொண்டே வெளியிற் போய்விட்டான்; கமலாவும் அப்படியே எல்லாவற்றையும் உமேசனுடைய தட்டில் இட்டாள்.

''உங்களுக்கு ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லையே'' என்றான் உமேசன்.

''நான் சாப்பிட்டாய்விட்டது'' என்றாள் கமலா. இவ்விதமாக அன்றைய வேலைகள் ஒருவாறு முடிந்தன.

புதிய இளஞ் சந்திரன் எழும்பி ஆற்றிலும் கரையிலும் இன்னொளி பரப்பா நின்றான். கப்பல் நிற்குமிடத்தருகில் கிராமம் இல்லை. பசுமைதங்கிய கழனிகளின் பரப்பின் மேல் ஒளிவீசி நிச்சப்தமாய் விளங்கிய இராப்பொழுது தன் மொழிகாக்காத காதலனது வரவை எதிர்பார்த்து காத்திருக்கும் பெண்மணி போன்று விளங்கியது.

கரையிலே தகரச்சார்ப்பால் ஆக்கப்பட்ட அறையொன்றில் மண்ணெண்ணெய் விளக்கடியில் ஒரு குமஸ்தா கணக்குகளைக் கூட்டிக் கொண்டிருந்தான். திறந்திருந்த தன்னறைக் கதவின் வழியே அவனைக் கண்ட இராமேசன் ''என்னையும் இப்படி காலன் இந்த குமாஸ்தாவைப் போல் ஒரு நிச்சயிக்கப்பட்ட கெட்டியான வழியில் விட்டிருக்கக்கூடாதா? அது மனோல்லாஸமானதாக இராவிட்டாலும் நடப்பதற்குத் தெளிவாக இருக்குமே; இவ்வித வாழ்க்கையில் யாதொரு கஷ்டத்திற்கும் இடமில்லை; சதா கணக்குகளை எழுதுவதும் தப்புகள் செய்தால் யஜமானனிடமிருந்து வசவுகள் வாங்கிக்கொள்வதும் நாள் முழுவதும் வேலை செய்து முடித்துவிட்டு இராத்திரி திருப்தியாய் வீட்டிற்குப் போய் படுப்பதும்.

மண்ணெண்ணெய் விளக்கை அவித்துவிட்டு குளிருக்கு அடப்பாய் சால்வையைப் போர்த்திக் கொண்டு அந்த குமஸ்தாவும் புறப்பட்டு கழனிகள் வழியே நடந்து சென்று தூரத்தில் மறைந்தான்.

கொஞ்சநேரமாய் கமலா தனக்குப் பின் வந்து நின்றுகொண்டிருந்ததை இராமேசன் உணரவில்லை. இராத்திரி சாப்பிட்டானதும் தன்னை இராமேசன் கூப்பிடுவான் என்று அவள் நினைத்திருந்தாள். அவள் வேலை முடிந்தும் கூப்பிடவில்லையே என்று மெதுவாய் கப்பல் புறத்திலே வந்து நின்றாள் கமலா.

அங்கே இராமேசனைக் கண்டதும் அவள் திடீரென நின்றுவிட்டாள் ; மேலே நடக்க அவள் கால் எழவில்லை; இராமேசன் முகத்தில் நிலவு வீசிற்று. அவன் மனது எங்கேயோ, அவளை விட்டு வேறு எங்கேயோ சென்றிருப்பதாகத் தோன்றிற்று ; அவளைப் பற்றிய எண்ணங்களே அவனுக்கு இல்லை. இப்படி ஏதோ தியானத்திற் போல் மெய்மறந்திருந்த இராமேசனுக்கும் அவளுக்கும் இடையிலே இரவின் தெய்வம் வெண்ணிலாவாகிய கவசம் பூண்ட பெரிய வோர் காவலாளியைப்போல் உதட்டின் மேல் விரலை வைத்து எச்சரிக்கை செய்து நிற்பது போல் தோன்றிற்று

இராமேசன் தன் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு தலையை தன் முன்னிருந்த மேஜைமீது சாய்த்ததும் கமலா மெதுவாய் தன்னறைக்கு நழுவிவிட்டாள். சற்றேனும் சப்தஞ் செய்தால் இராமேசன் ஒருவேளை அதைக்கேட்டு திரும்பிப் பார்த்து தான் அவனை நாடிவந்ததைத் தெரிந்துகொள்வான் என்று நிச்சப்தமாய் மெதுவாய் தன்னறைக்குட் சென்றாள் கமலா.

அந்த அறையோ இருண்டு அவளுக்கு பயங்கரமாயிருந்தது. வாசற்படியைக் கடந்தபோது அவ

ளுக்கு உடலில் நடுக்கமுண்டாயிற்று. நிர்க்கதியாய் அநாதையாய் தனித்து இருக்கிற ஸ்திதியை நினைந்ததும் வெள்ளம் போன்ற பெருந்துயரம் அவள் உடல் ஆவி எங்கும் பரந்தது; இருட்டில், அந்தச் சிற்றறையின் உட்புறமெல்லாம் ஏதோ ஒரு அதி பயங்கரமான பூதத்தின் அகண்ட வாய் போலத் தோன்றிற்று; ஆனாலும் வேறு எங்கே போய் அமரக்கூடும்? தன் சிறு உடலை எங்கேயாவது கிடத்தி தன் சொந்த இடம் என்ற நினைவுடன் அமைதியுற்றுக் கண்களை மூடி நித்திரை செய்யும்படியான ஒருசிறு இடங்கூட அவளுக்கு இல்லையே.

மறுபடியும் ஒருதடவை வெளியே எட்டிப் பார்த்தாள்; ஆனால் உடனே பின்வாங்கிவிட்டாள். அப்படிப் பின்வாங்கும்போது இராமேசனுடைய குடை திடுமென்ற சத்தத்தோடு அவளுடைய தகரப் பெட்டியின்மீது விழுந்தது.

அந்தச் சத்தத்தில் இராமேசன் எழுந்திருந்து திரும்பிப் பார்த்தான். "கமலா, நீயா?" என்று சொல்லிக்கொண்டே அவன் தன்னறை வாயிலில் நிற்பதைக் கண்டு "நீ அப்பொழுதே படுத்தாயிற்று என்றல்லவோ நினைத்திருந்தேன்; என்ன, பயங்கொண்டாயா என்ன; சரி, நானும் உள்ளே வருகிறேன்; அடுத்த அறையிலே தான் படுத்துக்கொண்டிருக்கிறேன். மத்திக் கதவைத் திறந்து வைக்கிறேன். பயப்படாதே போய் படுத்துக்கொள்."

"நான் பயப்படவில்லையே" என்று தலைநிமிர்ந்து அலக்ஷியமாய்ச் சொன்னாள் கமலா; பிறகு தன்னறையுட் சென்று கதவை மூடிவிட்டு படுக்கையில் விழுந்து முகத்தைச் சால்வையால் மூடிக்கொண்டாள். கவனிப்பார் அற்றுத் தனித்திருக்கிறோம். கூடப் பழகுவார்கூட இல்லை என்ற துக்கம் மேலிட்டது. அவளால் அதைத் தாங்க முடியவில்லை. தனக்குச் சுய அதிகாரமும் இல்லை என்றால் வாழ்நாளை எப்படிக் கடத்துவது.

பொழுது மெதுவாகவே சென்றது; இராமேசனே அடுத்த அறையில் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தான். கமலாவால் படுத்திருக்க முடியவில்லை. மெதுவாய் எழுந்து, வெளியெ சென்று கப்பலோரத்தில் இருக்கும் இருப்புக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்று ஆற்றங்கரையை நோக்கி நின்றாள்.

அங்கேயும் ஒரு பிராணியும் காணப்படவில்லை; நிச்சப்தமாயிருந்தது; சந்திரன் அஸ்தமிக்கும் சமயமாயிற்று. பயிர்களினூடை தோன்றிய வழித்தடங்கள் மங்குமொளியில் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தன. ஆனால் கமலா அவைகளையே உற்று நோக்குவாளாய் "எத்தனை பெண்கள் இந்த வழிகளினூடே தண்ணீர் கொண்டு தங்கள் தங்கள் வீடுகளைச் செல்கிறார்கள்" என்று எண்ணினாள். வீடு! சொந்த அகம்; அவள் மனது படபடத்தது. தனக்கும் சொந்தமென்று ஒரு சிறு வீடு இருந்தால்! அது இல்லையே."

ஆற்றங்கரை இருகையிலும் நீண்டு இருந்தது. மேலே ஆகாயம் தெற்குக்கோடியிலிருந்து வடக்குக்கோடி வரையிலும் பெரிதாய் விசாலமாய் வளைந்து இருந்தது. இவ்விதம் ஆகாயமும் பூமியும் நீண்டு அகன்று அளவற்றதாய் விளங்கினபோதும் இச்சிறு ஆத்மா ஒன்றிற்கு அது போதாததாயிற்று. ஏனெனில் இவ்வளவு இடத்தில் தனக்கென்று ஒரு சிறு வீடு இல்லையே; அதுதானே அவளுக்கு வேண்டும்.

யாரோ தன் பக்கலிலிருந்ததைக் கண்டு கமலா திடுக்கிட்டு திரும்பினாள்.

"பயப்படாதே, அம்மா, நான்தான்" என்றான் உமேசன்.

"நாழிகையாயிற்றே, நீ தூங்கவில்லையா உமேசா?"

கமலாவின் கண்களினின்றும் நீர் பெருகிற்று; அதை இப்பொழுது அடக்க முடியவில்லை; முத்து முத்தாய் அவளது கபோலங்களின் வடிந்தது அடக்க வொண்ணாத அவளது துயரம். உமேசனுக்குத் தெரியக்கூடாது என்று தன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள் கமலா.

நீர் கொண்ட மேகம் ஆகாயத்தில் போய்க்கொண்டே யிருக்கும்; தன்போல் ஆகாயத்தில் சுழலும் காற்றைக் கண்டதும் தன் பாரத்தை ஆதலால் முடியாது நீரைப் பொழிந்துவிடும்; அதுபோலவே கமலாவும்; கதியற்று வீடற்றுத் திரியும் அந்தச் சிறுபையன் தன்னைக்கண்டு விசாரித்து இரண்டு வார்த்தை பேசியதும் அவளுடைய மனதில் பொங்கியெழும் கண்ணீரைத் தடுக்கமுடியவில்லை. பேச வாய்திறந்தாள்; துக்கத்தால் உண்டான விம்மல்கள் தொண்டையில் அடைத்து நின்றன.

உமேசன் மனம் நொந்து அவளை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் வெகுநேரம் பேசாதிருந்தான். கடைசியில் "இந்தாருங்கள் அம்மா, நீங்கள் கொடுத்த ரூபாயில் ஏழு அணா பாக்கியிருக்கிறது" என்றான்.

கமலாவின் துக்கப்பெருக்கு தடையுற்றது; அசந்தர்ப்பமாய் உமேசன் இப்படிப் பேசியதால் அவளுக்கு புன்சிரிப்பு உண்டாயிற்று. அவள் மனது பிரியத்தால் இளகிற்று. "சரி நீ வைத்துக்கொண்டிரு; நாழிகையாயிற்று படுத்துக்கொள், போ" என்றாள்.

மரங்களின் பின்புறமாய் சந்திரன் மறைந்தான். கமலாவும் படுக்கையில் படுத்துக்கொண்டதும் அயர்ந்து தூங்கினாள். காலையில் சூரியன் உதயமாகியும் எழுந்திராமல் கமலா நித்திரையிலே ஆழ்ந்திருந்தாள்.

எனது பாட்டியார்

[ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி ஆங்கிலத்தில் எழுதிய 'பேப்பர் போட்ஸ்' (Paper Boats) இலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.]

பரம்பரையாய் புகழ் தங்கிய வம்சம் என் பாட்டியினுடையது. அவளது நீண்ட ஆயுட் காலத்தில் அவளுக்கிருந்த பெருந் துயரமெல்லாம், தன் நாளில், தன்போன்று வாழ்ந்திருந்த மற்ற பாட்டிமார் யாவரையும் காலனென்ற பகைவன் இவ்வுலக வாழ்க்கையினின்றும் அகற்றி விட்டான் என்பதொன்றே. அதிக வயதினாலுண்டாகும் ஒரு கடுமை ஸ்வபாவம் என் பாட்டியாரிடமில்லை. சிறிது முன்கோபத்தைத் தவிர, குடித்தன முறைமையில் அவள் வெகு சாமர்த்தியம் வாய்ந்தவள். தன் முதிர்ந்த எண்பதாவது வயதில், நல்ல பருவம் வாய்ந்தவர்களாய், பத்து அல்லது பன்னிரண்டு பெயர்கள் அடங்கிய ஒரு ஒற்றுமையுள்ள குடும்பத்தை, ஒரு சமயமும் பிறழாது அவள் அடக்கியாளுந் திறமையை என்னென்று சொல்லுவோம்!

தனியரசு செலுத்தினாலும் என் பாட்டியார் இரக்க மற்றவளல்ல. அவள் ஆளுகையை அக்குடும்பத்தில் யாவரும் மீறி அறியார். தன் சிறு

கைக்குள் அவ்வனைவரையும் அடக்கி யிருக்கும் இவள், கட்டுக் கிணங்காத திமிறியோடும் இளங் குதிரை போன்றவளையும், வெகு வன்மையுடனும், லாகவத்துடனும் தன்னுடைய பண்டைக்காலத் தொன்மைதனாகிய ரதத்தைக் கட்டியிழுக்கப் பழக்கிவிடுவாள். அவளிடமிருந்து தப்பித்துச் செல்லுவது ஸுலபமான காரியமல்ல. சூரியோதயம் முதல் சூரியாஸ்தமனம் வரையில் சகல விஷயங்களிலும் அவளிட்டதே சட்டமாகும். தன் கைகளில் பற்றியிருக்கும் கடிவாளங்களை ஒரு க்ஷண நேரம் கூட நழுவவிடாள். அதுப்பினும் அவள் பார்க்கத் தவறுவது இவ்வுலகிலிருப்பது நிரம்ப அரிதாகும். வேலை செய்ய அவள் சற்றும் அஞ்சாதது மாத்திரமல்ல; வயதாக வயதாக அவளுக்குச் சுறுசுறுப்பே அதிகரித்துக் கொண்டு வருகிறது. காலை பனிதோன்றுவதற்கும் முன் எழுந்து, பிள்ளைகள், பேரன்மார்கள் இவர்களுக்காகத் தயிர் கடைந்து அவள் வெண்ணை யெடுப்பது வழக்கம். அப்படியே வீட்டிலுள்ளோர் யாவரையும் அவரவர் வேலைக்குச் செல்ல இருட்டுப்பிரியும் முன்னமேயே படுக்கையினின்றும் கிளப்பிவிடுவாள். குடும்பத்தைத் தாங்கும் முறையில் என் பாட்டியைத்தான் யாவரும் மாதிரி பார்த்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு அடங்காவியல்புள்ள பேரனையும் அவளுடைய தீர்மானம், சமயோசித புத்தி, என்றும் குறைவடையாத உழைப்பின் பெருமை இவ்வனைத்தும் வெகு சீக்கிரம் இணங்கச் செய்துவிடும். எனது பாட்டியாரே அவள் மூச்சுநிற்கும்வரையில் குடும்பத்தின் அரசியென்பதை ஒருவரும் சந்தேகிக்க முடியாது.

குடும்ப பாரத்தை அவள் வகிக்கும் சக்தியை நோக்கின், இந்நிலையில்லா பூமியை சற்றும் ஆடாவண்ணம் தாங்கும் ஆதிசேஷனென்றே கூறலாம். பழைய வழக்கங்களை விடாமல் உபதேசிக்கும் ஆசாரியனான அவள், புது மாறுதல்களை வெறுப்புடனும், இகழ்ச்சியுடனல்லாமலும் வேறு விதமாய் நோக்குவதில்லை. விட்டுப் பிடிப்பது என்று நம் சாதாரண சம்பாஷணையில் வழங்கும் வேதாந்த முறையைக் கண்டறிந்து ஸ்தாபித்தது என் பாட்டியார் தான். இங்கிலீஷ் பார்லிமெண்டில் அரசுரிமை பெற்றுள்ள வகுப்பினருக்கு அடுத்தபடி வன்மை யுற்றிருக்கும் கூட்டத்தாரின் ஸ்தானத்தை அவ்வைக்கிய குடும்பத்தின் ஆலோசனை ஸபையில் அவள் வகிக்கின்றாள். புராதன ஆசாரங்களைப் புறக்கணிக்காது போற்றும் அவளைக் காண, அவைகளைமாற்றி முற்றிலும் சீர்திருத்தம்செய்ய முனைந்து நிற்பவரும் அச்சமுறுகின்றனர். என் பாட்டியை ஒரு கற்கோட்டை யென்போமாயின், நம் வழக்கங்களை மாற்ற உத்சாகத்துடன் எழும்பி யிருப்பவர்களுடைய கோடரிகளும் அதைப் பிளக்க இயன்றவைகளாக மாட்டா. தீர்க்கதரிசியாகிய ஒரு மகானுபாவனுடைய திருஷ்டியும், லோகானுபவம் படைத்தவனொருவனுடைய நிதானபுத்தியும், என் பாட்டிக்கு நன்கமைந்திருக்கின்றன. தான் கொண்டுள்ள மனோபாவனைகளை உண்மையில் நடத்திக் காண்பிப்பவள் அவளே. அவளே அவ்வொற்றுமையுள்ள ஹிந்து குடும்பத்தின் உற்பத்தி ஸ்தானமும். அதை சாதுர்யமாய் சமயத்திற்குத் தக்கவாறு நடத்திவரும் சூத்திரமுமாவாள். எவ்வளவோ கடும் புயற் காற்றுக்களையும் அவள் எதிர்த்து நின்று தாங்கி யிருப்பதுடன் அவைகளை அவள் விரும்பிப் போற்றுவதுபோல் 'புதிதாய் வர்ணம் பூச்சிடப்பெற்ற தன் மரக்கலத்தை ஒரு மாலுமியும் நேசிக்கமாட்டான்.

பூஜார்ஹமாயும், மிக்க வயது சென்றதுமான அரச விருட்சத்திற்கு என் பாட்டியாரை ஒப்பிட்டுக் கூறலாம். நீண்ட ஆயுளைப் பெறுதற்குரிய ரகசியத்தை அவள் அறிந்திருந்ததுமன்றி, எதையும் பொறுக்கக்கூடிய மனோதிடமும் அவளுக்கமைந்திருக்கின்றது. மூன்று தலைமுறைகள் அவளிடமிருந்து தோன்றியுள்ளன. அவர்களை அவளும் தான் என்றும் சலிப்படையாத மனவலிமையுடன் குடும்ப முறைக்கேற்ற சிறு நற்காரியங்களில் தேர்ந்து விளங்கும்படிப் போதித்து வருகின்றாள். விவாஹமாய், இல்லறவின்பத்தை மற்றோர் கிருஹத்தில் அனுபவிக்க வேண்டியவர்களான தன் வீட்டுப் பெண்மக்களை அதற்குத் தக்கவாறு ஒழுக்கத்திலும், ஆண்மக்கக்களை மிக்கக் கடுமையான சிக்ஷையிலும் அவள் பழக்கி வருவாள். வெவ்வேறு விதமான ஸ்வபாவமும், மனோபாவமுமுடைய குடும்பங்களிலிருந்து வந்துள்ள நாட்டுப் பெண்களையோ—எக்காலத்தும் பிரிவுபடாத ஒற்றுமையையும், பழமையாய்த் தொன்று தொட்டு வந்த தன் வம்ச வழக்கத்தையுமே மேற்கொள்ளச் செய்யும் சக்தி பெற்றிருக்கின்றாள். ஏனெனில் இல்லற முறைக்கேற்ற ஓர் உயர்ந்த அறிவு என் பாட்டியாருக்கு உரியதாயிருக்கிறது. அதை அவளும் மேன்மேலும் செழித்து விளங்கச் செய்வதன்றி சற்றும் மழுங்க விடுவதில்லை.

ஆனால் எப்பொழுதும் குடும்பத்தில் அவளுக்கு இருவிதமான மரியாதையே நடந்துவருகின்றது. ஒவ்வொருவரும் அவள் மீது பிரியமுடையவரேயாயினும், அவளதாளுகையை மீறி நிற்கவே அவ்வனைவரும்முனைந்து நிற்பார்கள். அதைத் தாங்கி எதிர்த்து நிற்க என் பாட்டியாருக்குச் சக்தியுண்டோ வென்பதில் நாம் சற்றும் ஐயமுறுவது அவசியமல்ல. சிரித்த முகத்துடனும், இனிய,மிருதுவான சொற்களுடனும், மனதிற்கு உகந்தவாறு ஒழுகும் மருமகளினால், அசைவற்ற நீரில் தோன்றும் நீர்ச்சுழிக் கொப்ப, என்றும் ஒரு சீராய் நடைபெற்று வரும் அவள் ராஜ்யபாரமும் சிறிது கலைவுறத் தொடங்கிவிடும். காதல் வயப்பட்டு பிள்ளைகளும் பேரன்மாரும் மகிழ்ச்சியுடன் புன்னகை கொள்வதைக்காண, அதை சற்றும் தகாத விதமாயெண்ணி அவள் தன் பிடிப்பை இன்னும் உறுதியாக்கிக் கொள்ளுவாள். கருங்கற்கள் ஒன்றோடொன்றுபட்டு உராய்வதினின்றும் ஒளியுண்டாவதுபோல், என் பாட்டியாருடைய நிகரற்ற சாதுர்யத்தினாலும் எப்பொழுதும் அக்குடும்பத்தில் சச்சரவானது முடிவில் நட்பாகவும், அழுகை சங்கீதமாகவும் மாறுகின்றன. இவ்விதம் ஒவ்வொரு தடவையும் அவளே வெற்றிகொள்ளும்பொழுது அவளுடைய அரசுரிமை யின்னும் நிலையுள்ளதாகவே ஆகின்றது.

ஸ்ரீ அகிலாண்டேசுவரீ தாடங்கப் பிரதிஷ்டா மஹோத்ஸவ பத்திரிகை.

ஸ்ரீகைலாஸ வாஸியான பரமேசுவரன் பூலோகத்தில் ஸ்ரீசங்கரபகவத்பாத ரூபமாய் அவதாரஞ் செய்து சைவம் முதலிய ஷண்மதஸ்தாபன பூர்வகமாக அத்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்டி ஸ்ரீ காஞ்சியில் ஸர்வக்ஞ பீடமேறி காமகோடி பீடத்தைப் பிரதிஷ்டை செய்து அதில் வீற்றிருந்து லோக குருவாய் விளங்கி லோகக்ஷேமத்தை அனு

க்கிரகித்ததோடு அநேக மஹா க்ஷேத்திரங்களில் மஹா யந்திர பிரதிஷ்டைகளையும் அனுக்கிரகித்திருக்கிறார்கள். அதைக்கொண்டுதான் ஆசார்யர்களுடைய ஸ்ரீமுக பீடிகையிலும் விசேஷணமானது விளங்கி வருகின்றது. அவ்விதம் ஆசார்ய பகவத்பாதாவர்களுடைய திருக்கைகளால் ஸ்ரீசகர பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்ட மஹா க்ஷேத்திரங்களில் திருவானைக்கா என்னும் ஜம்புகேசுவர க்ஷேத்திரம் பிரதானமானது. இது பஞ்சபூத க்ஷேத்திரங்களிலொன்றாகி திருச்சினாப்பள்ளிக்கு அதி ஸமீபத்தில் உபய காவேரி மத்தியில் விளங்கிவரும் மஹா க்ஷேத்திரம். இந்த க்ஷேத்திரத்தில் ஸர்வலோக மாதாவான ஸ்ரீ பராசக்தி அகிலாண்டேசுவரி என்னும் நாமதேயத்துடன் தபஸ்விலிருந்து வருகிறாள். ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாசார்யரவர்கள் திக்விஜயம்செய்து கொண்டு இந்த க்ஷேத்திரம் வரும் காலத்தில் இந்தப்பிராந்தியத்திலுள்ள மஹா ஜனங்களெல்லோரும் அம்பாளுடைய தவத்தின் உக்கிரகலையை கலியுகத்தில் சகிக்கக்கூடாமல் லோகாசார்ய மூர்த்தியிடம் முறையிட்டார்கள். ஸ்ரீ ஆசார்யரவர்களும் அம்மாளுடைய ஸந்நிதியில் தாமும் தபஸ்விலிருந்து அம்பாளுக்கு நேர் அபிமுகமாக மஹா கணேசரைப் பிரதிஷ்டை செய்து உக்கிரகலையை சாந்தமாக்கி சாந்தமான பரதேவதையினுடைய கலையை நவரத்நமயமான இரண்டு ஸ்ரீ சக்கிரங்களில் பிரதிஷ்டை செய்வித்தார்கள். அந்த இரண்டு சக்கரங்களுக்கே தாடங்கம் (கர்ணாபரணம்) என்று பெயர். அவ்விரண்டு தாடங்கங்களையும் ஆசார்யாள் அம்பாளுடைய கர்ணங்களில் சாத்தினார்கள். ஸ்ரீ அகிலாண்டேசுவரியின் ஸ்வரூபமுழுமையும் ஷை தாடங்கங்களிலேயே பிரதிஷ்டை செய்விக்கப்பட்டிருப்பதால் அத்தாடங்கங்களைச் சாற்றியே அம்பாளுக்கு ஒவ்வொருநாளும், நித்ய பூஜை உத்ஸவங்கள் நடந்துவருகின்றன. இதைக் கொண்டுதான் ஆசார்யாஷ்டோத்திரத்திலும் ஸ்ரீ சக்ராத்மக தாடங்கபோஷி தாம்பாமனோரதாய நம: என்கிற நாமாவளியும் விளங்கி வருகின்றது. அம்பாளுடைய அபிமுகத்தில் மஹா கணேசர் பார்சுவத்தில் ஸ்ரீ ஆசார்யமூர்த்தியும் தவக்கோலத்துடன் இன்றும் எழுந்தருளியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஸ்ரீ சக்ரதாடங்கங்களை ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டிய காலங்களில் லோககுருவான ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசார்யரவர்களுடைய அதிஷ்டானமான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் ஸிம்ஹாஸநாபிஷிக்தர்களா யிருக்கும் ஸ்ரீ ஆசார்யர்கள் ஸ்ரீ ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தில் விஜயம்செய்து தாடங்க பிரதிஷ்டா மஹோத்ஸவத்தை செய்துவரும் கிரமத்தை யனுசரித்து தற்காலம் ஸ்ரீ சக்ரதாடங்கங்கள் ஜீர்ணமாயிருப்பதை யுத்தேசித்து ஷை தாடங்கப்பிரதிஷ்டார்த்தமாய் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதியாகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் சென்ற காளயுக்தி ஹூ தைமீ 21உ விஜய யாத்திரையாய் புறப்பட்டு அநேக க்ஷேத்திரங்களிலும் புண்ணிய தீர்த்தங்களிலும் விஜயம் செய்து வருகின்றார்கள். ஷை யாத்திரையின் உத்தேச பூர்த்தியான ஸ்ரீ அகிலாண்டேசுவரி தாடங்கப்பிரதிஷ்டா மஹோத்ஸவத்தை கும்பகோண வாசிகளான ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் நாளது ருத்ரோத்காரி ஹூ சித்திரைமீ 16உ பானுவாரம் சுக்லபக்ஷத் திரயோதசி ஹஸ்த நக்ஷத்திரம் ஹர்ஷணயோகம் கரஜ கர்ணம் கூடிய சுபதினத்தில் உதயாதி 7-19-க்கு மேல் $11\frac{1}{4}$நாழிகைக்குள்ளாக மிதுனலக்கினத்தில் நடத்துவதாக நிச்சயித்திருக்கிறபடியால் பக்தர்களான சிஷ்யகோடிகளனைவர்களும் ஷை திருவானைக்காவல் க்ஷேத்திரத்தில் வந்திருந்து ஷை மஹோத்ஸவத்தை சிறப்பாய் நடப்பித்துவைத்து ஸ்ரீ அகிலாண்டேசுவரியை தரிசனம் செய்து கொண்டு ஷை அம்பாளுடைய திவ்யானுக்கிரகத்திற்கும் பாத்திரர்களாக வேண்டுமென்கிற விபரத்தை ஸ்ரீ மஹாஸந்நிதானத்திலேற்பட்ட ஆக்ஞையை முன்னிட்டு ஞாபிக்கப்படுகிறது.

தாலாட்டு.

[K. N. சுந்தரேசன் M. A.]

தூங்காய், தூங்காய்! கண் மூடாததேன்?
  தூங்காய், கண்ணே, தூங்காய்!
நார் உறுத்தும் வெறும் பாயின் மேல்
  நித்திரா தலை சாய வாராளோ?
பரிவாய் கண்தொட இரங்குவது ஹம்ஸதூளிகா
  பஞ்சணை மஞ்சத்து மேல் தானோ?
மூலைதோறும் வெண் வானெலாம்-கண்மணியே!
  மேகம் பரந்து விரித்த மஞ்சத்தே—
துயிலாமல் அங்குமிங்கும் புரண்டுருண்டு
  தவிக்கும் நிலாவின் கதிதான்-ஐயோ!
கரடுமுரடு மண்ணிலே கடும் அயர் தூக்கம்
  கவலையும் விழிப்பும் காவலும் விண்ணிலே!
வான் மீனினமெல்லாம் பானுவும் நிலாவும்
  விண்ணே உறங்காமல் பூமிக்கு இறங்கிலையோ?
வானினும் பஞ்சணைய யாங்கணு மிலையேனும்
  வையத்து கரடுமுரடில் தலைசாய வருவனவே!
என் முலைப்பால் கடலினில் மிதக்கும்
  இதயந்தன் திருமாலே! என் கண்ணே!
கண் மூடாய், மூடாய், என் கண்ணே!
  கண் துயிலாய்!

உபயோகமுள்ளது!!

சுதேசியமானது!

அமர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு 0—6—0	டப்பி 1-க்கு 0—2—0	டப்பி 1-க்கு 0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேட்லாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோராதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்ியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	× 25"	ரூ. 2½ முதல்	ரூ. 3 வரை	
,, 2.	12 ,,	× 27"	,, 4	,, 6	,,
,, 3.	16 ,,	× 34"	,, 6	,, 9	,,
,, 4.	18 ,,	× 36"	,, 8	,, 12	,,
,, 5.	20 ,,	× 44"	,, 11	,, 13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. 4½ முதல்	ரூ. 6 வரை	
9½ ,,	× 40"	,, 3	,, 5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2	,, 3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application.
(Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, Poona.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

இனும்! இனும்!!

அழகான 12 ஷீட் காலண்டர். தமிழ் இங்கிலீஷ் தேதியுள்ளது. ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பி தங்கள் விலாசத்தை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுங்கள்; முந்துங்கள்.

சகல விதமான பட்டு தினுசுகளும்
காசி விலைக்கு கொடுக்கப்படும்.
:: ஒருமுறை பரிக்ஷியுங்கள் ::

K. S. MUTHIAH & Co.,
188, Govindappa Naick Street, Madras.
Head Office: BENARES.